பதில்கள் கொடுக்க முடியும். துணைக் கேள்விகள் கேட்பதிலும், பதில்கள் கொடுப்பதிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், நானும் தாராளமாக நடந்துகொள்ள எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

### மூர் அங்காடி எதிரிலுள்ள நடைபாதைக் கடைகள்

*255 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர் மார்க்கெட்டுக்கு எதிரில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்றிவிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அந்தக் கடைகள் வேறு எந்த இடத்திற்கு மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Sweedish Mission Hospital in Tiruppathur*

*256 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any financial assistance has been given to the Sweedish Mission Hospital in Tiruppathur, Ramanathapuram district during 1969–70–71–72; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### பொள்ளாச்சியில் அரசு மருத்துவ மனை

*257 வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில், பல் வைத்தியம், கண் வைத்தியம் குடும்பக்கட்டுப்பாட்டுத் துறை ஆகியவற்றுக்குப் புதிதாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், இவற்றிற்கு அங்கு கட்டட வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில் பல் வைத்தியம், குடும்பக் கட்டுப்பாடுத் துறை ஆகியவற்றிற்காகப் புதிதாக மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர். கண் வைத்தியப் பகுதி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) மேற்கண்ட பகுதிகளுக்குத் தற்போது தனிக் கட்டட வசதி இல்லை.